# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2053/10 - 2018 ජනවාරි මස 08 වැනි සඳුදා - 2018.01.08

*2053/10 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 13/2016*

***(357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 4 ஆம் உறுப்புரையுடன், அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 155 ஆவது பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*கொழும்பு 01.*
*2018, சனவரி 04.*

ஒழுங்குவிதிகள்

*காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதிய 562/ 11 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 1981 ஆம் ஆண்டின் தரைப்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடை சட்டக்கோவை இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*(1) பத்தொன்பதாம் ஒழுங்குவிதியில், அதன் (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலம் :-*

> *“ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய அங்கவீனம் அல்லது இறப்பு பயங்கரவாதச் செயற்பாடுகளால் விளைவிக்கப்பட்டிருந்தால், தரைப்படைச் சட்டத்தின் 23 அல்லது 23அ என்னும் பிரிவின்கீழ் இராணுவ சேவைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான அல்லது இராணுவக் கடமைகளலல்லாதவையின் நிறைவேற்றுகையாக இருக்குமென தரைப்படை மருத்துவச் சபையொன்றினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து, தரைப்படைச் சேவை ஓய்வூதியம் ஏதேனுமிருப்பின் அதனுடன் சேர்த்து, அலுவலரொருவருக்கு அல்லது அலுவலரொருவர் தொடர்பில் அவ்வாறு அளிக்கப்பட்ட ஓய்வூதியத்தின் கூட்டுமொத்தத் தொகையானது, ஆண்டொன்றுக்கான சம்பளத்தின் 100 சதவீதத்தை, விஞ்சுதலாகாது.”.*


1A - G 26908 — 17 (2018/01)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*(2) இருபத்தெட்டாம் ஒழுங்குவிதியில், அதன் (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலம் :-*

> *"ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய அங்கவீனம் அல்லது இறப்பு பயங்கரவாதச் செயற்பாடுகளால் விளைவிக்கப்பட்டிருப்பின், தரைப்படைச் சட்டத்தின் 23 அல்லது 23அ என்னும் பிரிவின்கீழ் இராணுவ சேவைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான அல்லது இராணுவக் கடமைகளலல்லாதவையின் நிறைவேற்றுகையாக இருக்குமென தரைப்படை மருத்துவச் சபையொன்றினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து, தரைப்படைச் சேவை ஓய்வூதியம் ஏதேனுமிருப்பின் அதனுடன் சேர்த்து, படை வீரரொருவருக்கு அல்லது படை வீரரொருவர் தொடர்பில் அவ்வாறு அளிக்கப்பட்ட ஓய்வூதியத்தின் கூட்டுமொத்தத் தொகையானது, ஆண்டொன்றுக்கான சம்பளத்தின் 100 சதவீதத்தை, விஞ்சுதலாகாது.".*

*01-616/1*

---

*ச.வ.பி. 13/2016*

**(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 4 ஆம் உறுப்புரையுடன், அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*கொழும்பு 01,*
*2018, சனவரி 04.*

ஒழுங்குவிதிகள்

*காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான, 1991, மாச்சு 20 ஆந் திகதிய 654/10 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 1981 ஆம் ஆண்டின் கடற்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைச் சட்டக்கோவை இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*(1) பதினாறாம் ஒழுங்குவிதியில், அதன் (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலம் :-*

> *"ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய அங்கவீனம் அல்லது இறப்பு பயங்கரவாதச் செயற்பாடுகளால் விளைவிக்கப்பட்டிருப்பின், கடற்படைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் கடற்படைச் சேவைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான அல்லது கடற்படைக் கடமைகளின் நிறைவேற்றுகையாக இருக்குமென கடற்படை மருத்துவச் சபையொன்றினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து, கடற்படைச் சேவை ஓய்வூதியம் ஏதேனுமிருப்பின் அதனுடன் சேர்த்து, அலுவலரொருவருக்கு அல்லது அலுவலரொருவர் தொடர்பில் அவ்வாறு அளிக்கப்பட்ட ஓய்வூதியத்தின் கூட்டுமொத்தத் தொகையானது, ஆண்டொன்றுக்கான சம்பளத்தின் 100 சதவீதத்தை, விஞ்சுதலாகாது.".*

*(2) இருபத்தைந்தாம் ஒழுங்குவிதியில், அதன் (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலம் :-*

> *"ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய அங்கவீனம் அல்லது இறப்பு பயங்கரவாதச் செயற்பாடுகளால் விளைவிக்கப்பட்டிருப்பின், கடற்படைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் கடற்படைச் சேவைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான அல்லது கடற்படைக் கடமைகளின் நிறைவேற்றுகையாக இருக்குமென கடற்படை மருத்துவச் சபையொன்றினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து, கடற்படைச் சேவை ஓய்வூதியம் ஏதேனுமிருப்பின் அதனுடன் சேர்த்து, மாலுமியொருவருக்கு அல்லது மாலுமியொருவர் தொடர்பில் அவ்வாறு அளிக்கப்பட்ட ஓய்வூதியத்தின் கூட்டுமொத்தத் தொகையானது, ஆண்டொன்றுக்கான சம்பளத்தின் 100 சதவீதத்தை, விஞ்சுதலாகாது.".*

*01-616/2*

*ச.வ.பி. 13/2016*

**(359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 4 ஆம் உறுப்புரையுடன், அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 155 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு 01,
2018, சனவரி 04.

ஒழுங்குவிதிகள்

காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான, 1991 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதிய 645/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடை சட்டக்கோவை இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) பதினாறாவது ஒழுங்குவிதியில், அதன் (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலம் :-

> "ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய அங்கவீனம் அல்லது இறப்பு பயங்கரவாதச் செயற்பாடுகளால் விளைவிக்கப்பட்டிருப்பின், வான்படைச் சட்டத்தின் 23அ என்னும் பிரிவின்கீழ் வான்படைச் சேவைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான அல்லது வான்படைக் கடமைகளின் நிறைவேற்றுகையாக இருக்குமென வான்படை மருத்துவச் சபையொன்றினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து, வான்படைச் சேவை ஓய்வூதியம் ஏதேனுமிருப்பின் அதனுடன் சேர்த்து, அலுவலரொருவருக்கு அல்லது அலுவலரொருவர் தொடர்பில் அவ்வாறு அளிக்கப்பட்ட ஓய்வூதியத்தின் கூட்டுமொத்தத் தொகையானது, ஆண்டொன்றுக்கான சம்பளத்தின் 100 சதவீதத்தை, விஞ்சுதலாகாது.".

(2) இருபத்தைந்தாம் ஒழுங்குவிதியில், அதன் (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலம் :-

> "ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய அங்கவீனம் அல்லது இறப்பு பயங்கரவாதச் செயற்பாடுகளால் விளைவிக்கப்பட்டிருப்பின், வான்படைச் சட்டத்தின் 23அ என்னும் பிரிவின்கீழ் வான்படைச் சேவைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான அல்லது வான்படைக் கடமைகளின் நிறைவேற்றுகையாக இருக்குமென வான்படை மருத்துவச் சபையொன்றினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து, வான்படைச் சேவை ஓய்வூதியம் ஏதேனுமிருப்பின் அதனுடன் சேர்த்து, வான்படை வீரரொருவருக்கு அல்லது வான் வான்படை வீரரொருவர் தொடர்பில் அவ்வாறு அளிக்கப்பட்ட ஓய்வூதியத்தின் கூட்டுமொத்தத் தொகையானது ஆண்டொன்றுக்கான சம்பளத்தின் 100 சதவீதத்தை விஞ்சுதலாகாது.".

01-616/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.